# இராணிப்பேட்டை நகராட்சி

## 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

### தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.04.2018 | **பொருள் எண். 2830**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2830 அனுமதிக்கப்படுகிறது |
| 30.04.2018 | **பொருள் எண். 2831**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2831 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.04.2018 | **<u>பொருள் எண். 2832</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 சீனிவாசன்பேட்டை பகுதியில் (எம்.பி.டி.ரோடு) உள்ள குப்பை கிடங்கில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள குப்பையினை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணிக்கு (Garbage Dumping Area & Volume Calculater Survey @ Ranipet) ஆகும் தோராய செலவினம் ரூ.35,000/– க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவோ அல்லது சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து விலைப்புள்ளி வாயிலாகவே பெற்று மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1055/2015/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2832 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.04.2018 | **<u>பொருள் எண். 2833</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி மூலம் வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளில் சட்டத்திற்கு புறம்பாக மின் மோட்டார் பொருத்தி குடிநீர் உறிஞ்சக்கூடாது எனவும், மேலும் 2018 – கோடைக்காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு குடிநீரை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்துமாறும் பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்திடும் அறிக்கையை தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி அறிவிப்பினை தமிழ் தினசரி நாளிதழில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1201/2015/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2833 அனுமதிக்கப்படுகிறது |
| 30.04.2018 | **<u>பொருள் எண். 2834</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN73S1735 எண்ணுள்ள குடிநீர் லாரியின் Air Tank மற்றும் Self Motor பழுதடைந்துள்ளதால் குடிநீர் லாரியை இயக்க முடியவில்லை. எனவே, பழுதடைந்த பாகங்களை அகற்றி புதியதாக பொருத்திடவும் அதற்காகும் தோரய செலவினம் ரூ.5000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) குடிநீர் லாரி என்பதால் அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1030/2018/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2834 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.04.2018 | **<u>பொருள் எண். 2835</u>**<br>திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள Structural Design மற்றும் Wind Load Collection போன்ற பணிகளுக்கு பொதுநிதியின் கீழ் ரூ.1,00,000/– மதிப்பீட்டில் கலந்தாலோசகர் (Consultant) நியமித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2783 நாள் 29.12.2017–ல் அனுமதியளிக்கப்பட்டதில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 09.03.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவிகிதம்</th></tr><tr><td>1</td><td>திரு.என். தினேஷ்குமார், ஒப்பந்ததாரர்</td><td>0.25% மதிப்பீட்டை விட குறைவு.</td></tr><tr><td>2</td><td>திருவாளர் ஓம்சக்தி ஆர்கானிக்ஸ், சென்னை</td><td>5.00% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr></table><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.என்.தினேஷ்குமார் அவர்களின் மதிப்பீட்டை விட 0.25% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.3261/2017/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.2835 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண். 2836</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சிக்குச் சொந்தமான தெருவிளக்குகளை பராமரித்திடும் பொருட்டு ஏற்கனவே பழுதடைந்துள்ள ஒருமுனை மற்றும் மும்முனை தானியங்கி ON/ OFF சுவிட்சுகளை மாற்றி புதியதாக வாங்கி பொருத்துவதற்கும் அதற்காகும் தோராய மதிப்பீடு ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>இடங்களின் விவரம்</u>**<br>1) மண்டித் தெரு<br>2) கெல்லீஸ் ரோடு ( எஸ்.எம். மருத்துவமனை எதிரில்)<br>3) கெல்லீஸ் ரோடு<br>4) எம்.எப். ரோடு<br>5) ஆர். ஆர். ரோடு ( கே. ஆர்.எல். எதிரில் )<br>6) ஆர்.ஆர். ரோடு (கோழிகடை அருகில் )<br>7) ஆர்.ஆர். ரோடு ( பேரி கார்னர் அருகில்)<br>8) சங்கம் தெரு<br>9) பிள்ளையார் கோயில் தெரு<br>10) அம்மூர் ரோடு<br>11) காந்திநகர் – I<br>12) காந்திநகர் – II<br>13) எம்.பி. டி. ரோடு – I<br>14) எம்.பி. டி. ரோடு – II<br>15) ஆர்.எஸ். ரோடு (SBI எதிரில்)<br>16) வண்டி மேட்டுத் தெரு<br>17) முத்துக்கடை பஸ் நிறுத்தம்<br>18) அம்மூர் ரோடு<br>19) ஆர்.எஸ். ரோடு (மும்முனை)<br>20) தியாகி மாணிக்கம் தெரு.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1058/2018/இ1)** | நகரமன்ற தீர்மானம்<br>எண்.2836<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண். 2837</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் தொட்டி வணிக வளாக கடை எண். 12 மற்றும் 13–ன் குத்தகைதாரரான திரு.டி.வெங்கடேசன் என்பவரின் கடைகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.3807/2016/அ3 நாள் 03.03.2017–ல் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து உத்திரவு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து திரு.டி.வெங்கடேசன் என்பவர் மேற்படி 2 கடைகளுக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண். 380/2018 மற்றும் W.M.P. No. 434/2018-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதின் பேரில் இவ்வலுவலக அறிவிப்பு மூலம் உயர்வு செய்யப்பட்ட வாடகை செலுத்த கோரி தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதனால் வரைக்கும் வாடகை தொகை ரூ.86520+ ரூ.86520 = ஆக மொத்தம் ரூ.1,73,040/– செலுத்தாததால் வருவாய் ஆய்வரால் 11.04.2018 அன்று மேற்படி கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இரண்டு கடைகளையும் மறு ஏலம் விடவும், அதனால் ஏற்படும் இழப்பிற்கு குத்தகைதாரரிடம் வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .<br><br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>**1)** மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** கடை எண்.12 மற்றும் 13–க்கு செலுத்த வேண்டிய ரூ.1,73,040/–ஐ வசூலிக்கவும் மறு ஏலம் விடுவதினால் நகராட்சிக்கு ஏற்படும் இழப்பிற்கும் திரு.டி. வெங்கடேசன் என்பவர் மீது வழக்கு தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்ற தீர்மானம்<br>எண்.2837<br>அனுமதிக்கப்படுகிறது |

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.